# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
************

**முறையீட்டு மனு எண்: 10/2018/பே**
**ஆணை நாள். 23 –07–2018**

திரு என். சந்திரசேகரன்,
த/பெ திரு நஞ்சா கவுடர்,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி – 643 213 --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம். --- எதிர் மனுதாரர்

**ஆணை.**

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேருராட்சி, கோடேரி பகுதியினைச் சேர்ந்த. திரு.N.சந்திரசேகரன், த/பெ திரு. நஞ்சா கவுடர், என்பவரது 04.01.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2018 அன்று பெறப்பட்டு, மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 010/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய பரிசீலனைகள் மேற்கொண்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மீது கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்து விசாரணைக் கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேருராட்சியில் 11–வது வார்டில், மலைப்பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ.18.00 லட்சம் மதிப்பீட்டில், புதியதாக P.B.பீமன் வீடு முதல் K.சந்திரன் வீடு வரை தார்ச்சாலை அமைக்க அனுமதி பெறப்பட்டதாகவும், மேற்படி சாலை பாதியில் ஆரம்பித்து தரமற்ற முறையில் சாலை அமைக்கப்பட்டுள்ளதாகவும், இச்சாலைக்கான அணுகு சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்காமல் பேரூராட்சி செயல் அலுவலர் இருந்துள்ளார் எனவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்து விசாரணை கோரி மனுவினைச் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 17.01.2018ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர், தனது கடித ந.க.எண். 331/2016/நாள்.31.01.2018ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அதிகரெட்டி பேரூராட்சிக்குட்பட்ட கோடேரி கிராமத்திற்கு இணைப்பு சாலை வேண்டி மனுதாரர் மற்றும் அவரது சகோதரர் திரு.அசோக்குமார், ஆகியோரின் தலைமையில் கோடேரி ஊர் பொதுமக்களின் பங்குத் தொகையில் மண்சாலையாக மாற்றம் செய்து பணிகள் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார். பணிகள் மேற்கொள்ளும்போது மனுதாரர் மற்றும் அவருடைய சகோதரருக்கு சொந்தமான தோட்டம் வழியாக சாலை அமைக்க மனுதாரர் மறுப்பு தெரிவித்துள்ளதால் ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து மனுதாரர் மற்றும் அவருடைய சகோதரரின் தலைமையினை மாற்றி கோடேரியில் வசிக்கும் பொறியாளர் திரு.ரங்கபோஜன், தலைமையில் 2009–10ம் ஆண்டு முன்னாள் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் பணிகள் மேற்கொண்டு மண்சாலையாக மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனுதாரர் திரு.நந்தி என்பவருக்கு வாய் மொழியில் குடியிருப்பு கட்டிடம் கட்ட மனுதாரின் இடத்தினை வழங்கி, தானே முன்னின்று கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், சாலை பிரச்சினையில் காழ்ப்புணர்ச்சி காரணமாக திரு.நந்தி என்பவரின் கட்டிடத்தினை இடிக்க கோரியு, பேரூராட்சி செயல் அலுவலர் மீதும் உயர் அதிகாரிகள் மீதும் 2009–10 ம் ஆண்டு முதல் பல தவறுதலான புகார்களை அளித்து வருவதாகவும், கோடேரி ஊர் பொதுமக்கள் மண் சாலை அமைத்து அதிகரெட்டி பேரூராட்சிக்கு வழங்கியதின் அடிப்படையில், மேற்படி சாலையினை செயல் அலுவலர் நேரில் பார்வையிட்டு இச்சாலையினை 2009–10ம் ஆண்டு தார்ச்சாலையாக மாற்றவும் இணைப்புச் சாலையாக அமைக்கவும் உரிய கருத்துருக்களை மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் ரூ.17.00 லட்சம் மதிப்பீட்டில் 02.08.2010ல் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில், டெண்டர் விடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மொத்த அணுகு சாலையானது 900 மீட்டர் எனவும் அதில் 280 மீட்டர் ஊர் பொதுமக்களின் சொந்த செலவில் தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக 500 மீட்டர் அளவிற்கு அதிகரெட்டி பேரூராட்சி மூலம் ரூ.13,33,522/– செலவினம் மேற்கொண்டு சாலை அமைக்கப்பட்டதாகவும், மீதமுள்ள 120 மீட்டர் சாலையானது நில உரிமையாளர்கள் பேரூராட்சிக்கு நிலத்தினை ஒப்படைக்காத நிலையிலும் மனுதாரர் வழக்கு தொடர்ந்த காரணத்தினாலும் சாலை அமைக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எனவே 500 மீட்டர் சாலை அமைத்து பணி முடிவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் சமர்ப்பித்துள்ளார். மலைப்பகுதி மேம்பாடு திட்ட இயக்குநர் அவர்களால் முதல் பகுதி தொகையாக ரூ.8,50,000/–விடுவிக்கப்பட்டதாகவும், பிறகு முடிவறிக்கையில் ரூ.13,33,522/– சமர்ப்பித்த நிலையில் மீதமுள்ள தொகை ரூ.4,83,522/– பெறப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டு, ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.17,00,000/–ல் செலவினம் ரூ.13,33,522/– போக மீதமுள்ள தொகை ரூ.3,66,478/– அரசு

கணக்கிலேயே வரவாக்கப்பட்டு மீதமுள்ள பணியும் கைவிடப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இச்சாலை அமைப்பதற்கு முன்னர் பொதுமக்கள் குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட, கட்டுமானப் பொருட்களை தலையில் சுமந்து சென்றதாகவும், இச்சாலை அமைக்கப்பட்டபின்னர் இந்நிகழ்வு முற்றிலுமாக தவிர்க்கப்பட்டு பொருட்கள் அனைத்தும் கட்டுமான இடத்திற்கு அருகிலேயே செல்லவும், பொதுமக்களுக்கு வெகுவாக பயன்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் தெரிவித்துள்ள சாலை சம்பந்தமாக இப்பேரூராட்சியில் எவ்விதமான முறைகேடும் நடைபெறவில்லை எனவும், மனுதாரர் சொந்தப்பிரச்சினை கொண்டு தேவையில்லாமல் தவறாக புகார்களை 2009-10ம் ஆண்டு முதல் தொடர்ந்து அளித்து வருவதாகவும், 120 மீட்டர் நீள சாலையானது நில உரிமையாளர்களால் நிலத்தினை பேரூராட்சிக்கு வழங்கும்பட்சத்தில் மீதமுள்ள இணைப்பு சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.02.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரருக்கு அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் அளிக்கப்பட்ட விளக்க அறிக்கையின் நகலினை அனுப்பி வைக்கப்பட்டு அதன் மீதான ஆட்சேபணை/விளக்கம் இருப்பின் அதன் விவரத்தினை 10 நாட்களுக்குள் தெரிவிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 02.03.2018ம் நாளிட்ட கடிதத்தில் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்கத்தின் பேரிலான தனது ஆட்சேபணையினை தெரிவித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதில் பிரதானமாக மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் P.B.பீமன் வீடு முதல் K.சந்திரன் வீடு வரை 500 மீட்டர் தார்ச்சாலை அமைக்க ரூ.18.00 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டதாகவும், ஆனால் கருத்துரு வழங்கும் முன்னர் நில உரிமையாளர்களிடம் அனுமதி பெறாமல் சாலை அமைக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இதனால் அரசு நிதி முறையற்ற முறையில் செலவிடப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையினை தான் மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 08.05.2018ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி பொருள் தொடர்பாக தங்களது விளக்கங்களை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய அதிகரெட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர்களான திரு.சி.குணாளன், திரு.N. மணிகண்டன் மற்றும் தற்போதைய செயல் அலுவலர் திரு.சி.நந்தகுமார் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2018 அன்று ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

இதன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 20.06.2018 அன்று ஆஜரான அதிகரெட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு சி.குணாளன் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் அதிகரெட்டி பேரூராட்சியில் 11.01.2011 முதல் 18.05.2011வரை மற்றும் 02.02.2013 முதல் 25.02.2014 வரையிலும் செயல் அலுவலராக பணிபுரிந்ததாக தெரிவித்துள்ளார். இடைபட்ட காலத்தில் திரு. நடராஜ், என்பவர் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பிலும், திரு.ஜோகி என்பவர் கூடுதல் பொறுப்பிலும் இருந்ததாக தெரிவித்துள்ளார். தனது பணிக்காலத்தில் மேற்கண்ட புகார் குறித்த எந்த பணிகளும் ஆரம்பிக்கவில்லை எனவும், முறையீட்டு மனுதாரர் புகார் எழுதுவதே தொழிலாக கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் திரு.சிவகணேசன் என்பவர் மீதும் தன்

மீதும் மற்றும் திரு. நடராஜ் என்பவர் மீதும் உதவி இயக்குநராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள திரு.பெரியசாமி என்பவர் மீதும் பல புகார்கள் எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். திரு.ஜோதி, என்பவர் செயல் அலுவலராக இருக்கும்போது பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டதாகவும், திரு.ஜோதி, பணிக்காலத்தில் ரூ.5.00 லட்சம் திரு. முத்துராமலிங்கம் என்பவருக்கு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி அலுவலர் தற்போது ஜெகதளா என்ற இடத்தில் பணி ஓய்வு பெற்று வசித்து வருவதாக தெரிவித்துள்ளார். அதன் பிறகு திரு.நடராஜ், செயல் அலுவலராக இருந்ததாகவும், அவர் தற்போது கேத்தி பேரூராட்சியில் பணி புரிவதாகவும் தெரிவித்துள்ளார். திரு.நடராஜ் என்பவர் ரூ.5.00 லட்சம் ஒப்பந்ததாரர் திரு.முத்துராமலிங்கம் என்பவருக்கு பட்டுவாடா செய்ததாகவும், தனது பணிக்காலத்தில் ரூ.3.33.522/–பட்டுவாடா செய்யப்பட்டதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பணி செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் கீழ் ரூ.8.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன்படி பணி முடிவடைந்த பிறகு நிர்வாக அனுமதியில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை பெறப்படும். அந்த வகையில் ரூ.13.33,522/– பணி முடிக்கப்பட்டு அறிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதாகவும். திரு.ஜோதி, செயல் அலுவலரால் ரூ.5.00 லட்சம் மட்டும் விடுவிக்கப்பட்டதாகவும், திரு.நடராஜ் செயல் அலுவலரால் ரூ.5.00 லட்சம் விடுவிக்கப்பட்டு தன்னால் ரூ.3,33,522/–விடுவிக்கப்பட்டதாகவும், ஆகமொத்தம் ரூ.13.33,522/– விடுவிக்கப்பட்டு பெறப்பட்ட தொகை மட்டுமே மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தொகை எனவும், பணி முடிக்கப்பட்டது எனவும் தனது வாக்குமூலத்தில் திரு.சி.குணாளன் தெரிவித்துள்ளார்.

20.06.2018 அன்று அதிகரெட்டி' பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு.N.மணிகண்டன் இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் 2009 ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை அதிகரெட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும், மேலும் ஜெகதளா பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார். அதிகரெட்டி பேரூராட்சி, சோலூர் சம்பந்தப்பட்ட பணிகள் மனுவில் குறிப்பிட்டுள்ள பணி ஆகும் எனவும், சோலூர் என்ற பகுதிக்கு செல்வதற்கு சாலை இல்லாத நிலையில் ஊர் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து (மனுதாரர் உட்பட) தங்கள் ஊருக்கு சாலை வசதி அமைத்து தருமாறு முறையீடு செய்ததின் அடிப்படையில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.17.00 லட்சம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். திரு . பீமன் வீடு முதல் திரு.சந்திரன் வீடு வரை சுமார் 500 மீட்டர் நீளமும் 3.00 மீட்டர் அகலமும் தார்ச்சாலை அமைக்க திட்ட மதிப்பீடு ரூ.17.00 லட்சம் தயாரிக்கப்பட்டதாகவும், ரூ.17.00லட்சம் மாவட்ட ஆட்சியரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாகவும், தன்னுடைய பணிக்காலத்தில் இந்த வேலை சம்பந்தமாக ஒப்பந்தப்புள்ளி கோரி திரு.முத்துராமலிங்கம் என்பவர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரி பணி இறுதி செய்யப்பட்டதாகவும், அதன் பின்னர் பணி துவங்கும் முன்னரே தான் பணி மாறுதலில் சென்று விட்டதாகவும் தனக்கு பிறகு திரு.ராஜகோபால், என்பவர் கூடுதல் பொறுப்பில் இருந்ததாகவும் அவருடைய பணிக்காலத்திலும் பணிகள் எதும் நடக்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

20.06.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் அதிகரெட்டி பேரூராட்சி தற்போதைய செயல் அலுவலர் திரு. சிநந்தகுமார், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"……….நான் கடந்த நான்கு மாதங்களாக அதிகரெட்டி பேரூராட்சியின் செயல் அலுவலராக கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், திரு. சந்திரசேகரன் என்பவரின் மனு விபரம் தனக்குத் தெரியும் எனவும் தெரிவித்துள்ளார். மனுவில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு 2009–10 ஆண்டிற்கு சம்பந்தப்பட்டது எனவும் மனுவில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு.ரவிக்குமார், செயல் அலுவலராக பொறுப்பில் இருந்தார் என்வும், 31.01.2018 ம் நாளிட்ட அறிக்கையில் சில முரண்பாடுகள் உள்ளதாகவும், அதனை சரிபார்த்து இரண்டு தினங்களில் அறிக்கை சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் அதிகரெட்டி பேரூராட்சி தற்போதைய செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

அதிகரெட்டி தற்போதைய செயல் அலுவலர் திரு. சிநந்தகுமார் தனது 26.06.2018ம் தேதிய வாக்குமூலத்தில் உறுதியளித்தபடி மேற்படி பொருள் சம்பந்தமாக தனது கூடுதல் அறிக்கையினை கடித ந.க.எண். 331/2016/நாள். 21.06.2018ன்படி அறிக்கையினை இம்முறைமுன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அதிகரெட்டி பேரூராட்சிக்கு கோடேரி கிராமத்திற்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் கோடேரி கிராமத்திற்கு அணுகு சாலை வேண்டி நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டு இயக்குநர் அவர்களுக்கும் மனு அளித்ததின் அடிப்படையில் அதிகரெட்டி பேரூராட்சிக்கு ரூ.17.00 லட்சம் மதிப்பீட்டில் திரு.P..B.பீமன் வீடு முதல் சந்திரன் வீடு வரை புதியதாக அணுகு சாலை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இப்பணியினை திரு.முத்துராமலிங்கம் என்ற ஒப்பந்தக்காரருக்கு பணி மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கப்பட்டதாகவும், இப்பணிக்காக முதல் தவணையாக மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநரிடமிருந்து ரூ.8.50 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். பின்னர் இப்பணிக்கான பொறியாளரின் முடிவறிக்கையின்படி இப்பணிக்கான முடிவு அறிக்கைத் தொகை ரூ.13,33,522/–ல் மீதித் தொகை ரூ.4,83,522/– ஒதுக்கப்பட்டதாகவும், இத்தொகையினை ஒப்பந்தக்காரருக்கு பணி முடிவு அறிக்கையின்படி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, அதிகரெட்டி பேரூராட்சியின் முன்னாள் மற்றும் தற்போதைய செயல் அலுவலர்கள் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், அதிகரெட்டி பேரூராட்சியில் மனுவில் குறிப்பிட்டுள்ள P.B.பீமன் வீடு முதல் சந்திரன் வீடு வரையிலான சாலையினை அமைக்க முறையீட்டு மனுதாரர் உட்பட பொதுமக்களால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மனு அளித்ததின் அடிப்படையில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநரால் 900 மீட்டர் தார்ச்சாலை அமைக்க ரூ.17.00 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன்படி இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. முத்துராமலிங்கம் என்பவருக்கு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 900 மீட்டர் சாலையில் ஊர் பொதுமக்களது சொந்த செலவில் 280 மீட்டருக்கு தார்ச்சாலை அமைக்கப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக 500 மீட்டருக்கு அதிகரெட்டி பேரூராட்சி

மூலம் ரூ.13,33,522/-க்கு தார்ச்சாலை அமைக்கப்பட்டு சாலை அமைக்கப்பட்ட தூரத்திற்கான முடிவு அறிக்கையின்படி மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநரிடமிருந்து தொகை பெறப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள தொகை மேற்படி சாலையில் 120 மீட்டர் தனியாருக்கு சொந்தமான நிலத்தினை பேரூராட்சிக்கு ஒப்படைக்காத காரணத்தினால் சாலை போட இயலவில்லை எனவும், இதற்கான தொகை ரூ.3,66,478/- அரசு கணக்கிலேயே உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே போடப்படாத சாலைக்கான தொகை அரசிடமிருந்து பெறப்படவில்லை என்பது உறுதியாகிறது. இருப்பினும் ஒரு அணுகு சாலை முழுவதுமாக போடப்படாமல் ஒரு பகுதி விடுபட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு மேற்படி விடுபட்ட 120 மீட்டர் பகுதிக்கான சாலையினையும் முழு அளவில் போட விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தெரிவித்து அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுவதுடன், இப்பொருள் தொடர்பான இம்முறைமன்ற நடுவ தொடர் நடவடிக்கை கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

-//உத்தரவின்படி - அனுப்பப்படுகிறது//-

14/8/2018

செயலாளர்

சென்னை - 600 032

14815

14/8/18

பெறுநர்

1.திரு என். சந்திரசேகரன்,
த/பெ திரு நஞ்சா கவுடர்,
கோடேரி அஞ்சல்,
நீலகிரி - 643 213

2.செயல் அலுவலர்,
அதிகரெட்டி பேரூராட்சி,
நீலகிரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நீலகிரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நீலகிரி.